3. அறிவிப்புகள்.

(அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகளின் 9 (1) வது விதியின் கீழ் கீழ்க்கண்ட உறுப்பினர்களை இப்பேரவையின் நான்காவது கூட்டத் தொடரின் மாற்றுத் தலைவர்களாக (Panel of Ch.i m..n) நியமிக்கிறேன் :—

1. திரு. மா. சின்னராசு.
2. டாக்டர் கே. சமரசம்
3. திரு. கே. குப்புசாமி
4. திரு. செ. செம்மலை
5. திரு. டி. ஆர். வேங்கடரமணன்.

4. தகவல் கோரல்.

)அ) கட்சியிலிருந்து நீக்கப்பெற்ற உறுப்பினர்கள் குறித்து

(சில உறுப்பினர்கள் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டரா? அமைச்சர் அவர்கள் படித்த அறிக்கையின் மீதா? (குறுக்கீடு) அவை நடவடிக்கைகள் பற்றி வருமேயானால் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பலாம். மற்றபடி முக்கியமானதாக இருந்தால் என்னுடைய அறையில் கேட்டு, அமைச்சரைக் கேட்டு எழுப்ப லாமென்று சொன்னேன் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப் பினர் திரு. உத்திராபதி அவர்களிடம் காலையிலே சொன்னேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்களைக் கேட்டுக்கொண்டு எழுப்புங்கள் என்று சொன்னேன். (குறுக்கீடு) எதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் கேட்கிறீர்கள் ?

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பாயின்ட் ஆஃப் ஆர்டர் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவை நடவடிக்கை குறித்து என்றால் எழுப்பலாம்.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, சில மாதங்களுக்கு முன்பாக எனது சக சட்டமன்ற உறுப்பினர்களான திரு. இரா. தாமரைக்கனி அவர்களும், திரு நெகமம் கந்தசாமி அவர்களும் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வெளியேற்றப்பட்டதாக........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லக் கூடிய விவரங்களை என்னுடைய அறைக்கு வந்து தெரிந்து கொள்ளுங்கள். (குறுக்கீடு) இதிலே பாயின்ட் ஆப் ஆர்டர் எதுவும் இல்லை.

1987 மார்ச் 2]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைச் சபாநாயகர் அவர்களே, பாய்ண்ட் ஆஃப் ஆர்டர்: மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அறிவித்த அந்த அறிவிப்பிலிருந்து என்னுடைய கேள்வி எழுகிறது. கிராமப்புறங்களில் குழாய்க் கிணறுகள் போடுகின்றனர்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிக்கையின் மீது எந்தவிதமான விவாதமும் கூடாது. அது நடைமுறை அல்ல. (குறுக்கீடுகள்) பேசும்போது உறுப்பினர்கள் விவாதத்தில் பேசிக்கொள்ளலாம். அவை நடவடிக்கை குறித்ததாக இருக்கும் என்றுதான் நான் எ. எஸ்.ஏ. ஆறுமுகம் அவர்களைப் பேச அனுமதித்தேன். வேறு வார்த்தைகளைப் பேசுவது சரியல்ல. (குறுக்கீடுகள்) பி.ஏ.சி.யிலே நேரம் பற்றிப் பேசலாம். அங்கே பேசலாம். அமைச்சர் அறிக்கையின் மீது பாயின்ட் ஆஃப் ஆர்டர் கிடையாது.

(ஆ) விவசாயக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல் குறித்து.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது தமிழக அரசு விவசாயிகளுக்குக் கடன்களைத் திருப்பிச் செலுத்த 28–2–1987 வரையில் அனுமதி அளித்திருக்கின்றது. அதற்காக விவசாயிகள் சார்பாக நன்றி சொல்லிக்கொள்கிறேன். விவசாயிகள் இன்னும் கால அவகாசம் கேட்டிருக்கின்றார்கள். அரசு இன்னும் 15 தேதி வரைக்கும் அனுமதி அளித்தால் நிச்சயமாகக் கட்டிவிடுவார்கள். அதற்கு அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கொள்கை விவகாரமாக இருக்கின்றது. இதிலே பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்ப வேண்டாம்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

5. அறிக்கை அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்காணும் அறிக்கையினை நான் இந்தப் பேரவைக்கு அளிக்கின்றேன்:

"இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1970–71 ஆம் ஆண்டிற்கான அறிக்கையில் கண்டுள்ள பொது நிறுவனங்கள் தொடர்பான பத்திகளின் மீதான குழுவின் (1980–81) பத்தாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் (சிவில் இனங்கள்) மீது அரசு மேற்கொண்டு எடுத்த நட்வடிக்கை பற்றிய மேற்படி குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை,''